1994 ஜனவரி 5]

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) குடிநீர், கழிவுநீர் இவைகள் தனியாக கழிவுநீர், குடிநீர் வடிகால்வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் ஏற்படும் குறைகளை அவர்களே நிவர்த்திச் செய்கிறார்கள்.

(ஆ) காலரா, மஞ்சள்காமாலை பாதித்தவர்களை அதற்கென்று தனியாக உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அதிக தனி கவனம் செலுத்திப் பராமரிக்கப்படுகிறது. மேலும், வாரியத்தின் ஒத்துழைப்புடன் எங்கெங்கு குளோரின் கலக்காமல் உள்ளதோ, இந்த இடங்களை கண்டறிந்து கூட்டாக குளோரின் நீரில் கலக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியும் அவர்களுக்கு அடிக்கடி தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் குறைபாடுகள் உள்ள இடங்களை சுட்டிக்காட்டி அவர்களே நிவர்த்தி செய்துவிடுகிறார்கள்.

165--

மானூர் ஒன்றியம் வடகரையில் மின் அழுத்தத்தைக் கூட்ட புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

***15123-திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் வடகரை கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் அழுத்தத்தைக் கூட்ட புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மானூர் ஒன்றியம், வடகரை கிராமத்தில் மின் அழுத்த குறைபாடுகள் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

166--

திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்.

***19822-திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--